விழு/ 2

# விடுதலைப் பாதையில்

«UTHAYAM»
Boks 4366
5013 NYGÅRDSTANGEN
14 JAN. 1984

www.tamilarangam.net

இன்று நாட்டின் விடுதலைக்காக பல்வேறுபட்ட இயக்கங்கள் போராடி வருகின்றன. இவற்றிடையேயான ஒருங்கிணைவு அவசியம் என்பதை சகலரும் உணர்ந்த போதிலும் அது இன்று நடைமுறைச் சாத்தியம் அற்றதாகவே உள்ளது. (உ-ம் மட்டக்களப்புச் சிறை உடைப்புச் சம்பவம்) இந்நிலையில் நாம் அனைவரும் சரியானதோர் அமைப்பினைச் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நாம் அனைவரும் எமது பங்களிப்பினைச் சரியான ஸ்தாபனம் ஒன்றினூடாக செய்வதன் மூலம் அதன்கீழ் ஏனைய இயக்கங்களையும் அணி திரட்டக்கூடிய சாத்தியக்கூறு இருக்கும். அந்தவகையில் எம் மத்தியிலுள்ள இயக்கங்கள் பற்றி ஒரு பரிசீலனையை நாம் மேற்கொள்ள விழைகிறோம். இவ் முதல் இதழில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்' உத்தியோகபூர்வஏடான புதிய பாதையினை விமர்சிக்க விழைகின்றோம்.

## புதிய பாதையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் - ஒரு நோக்கு

புதிய பாதை செய்தி இதழானது பல காலம் வெளிவராது மீண்டும் கார்த்திகை 15ல் வெளிவரத் தொடங்கியுள்ளது. இதனைப் பலரும் ஆவலோடு எடுத்துப் பார்வையிட முனைகையில் பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதாக கருதப்படும் இவ் இயக்கமானது தனது போராட்டப் பாதைபற்றி எதுவும் கூறாது பிறஇயக்க நடவடிக்கைகளைப் பற்றி ஆரோக்கியமற்ற முறையில் விமர்சித்தமை இவர்களது அரசியல் வங்குரோத்துத்தனத்தையே காட்டி நின்றது. மக்களிடையே விடுதலை உணர்வையும், தியாக மனப்பான்மையையும் நம் தாய் நாட்டிற்காக எம்மையே அர்ப்பணிக்கும் பக்குவத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்களைப் போராளிகளாக்குதலே உண்மையான மக்கள் போராட்டமாகும். மக்கள் போராட்டம், மக்கள் போராட்டம் எனக் கூறும் இவர்கள் கடந்த காலத்தில் அதற்காக எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியோ அன்றி தமது கொள்கைகளைப் பற்றியோ தெளிவாக எதனையும் தெரிவிக்கவில்லை. விடுதலை இயக்கத்தின் பாதையை மக்கள் முன்வைக்காது மற்றைய பாதைகளைக் கண்டிக்கவோ, விமர்சிக்கவோ முனைந்தது இப் புதிய பாதையை புதிய பாதையாக அங்கீகரிக்க இய்லாத சூழ்நிலைக்கு தள்ளியுள்ளது.

## புதிய பாதையின் நமது நோக்கு குறித்து

'இன்னும் பல இயக்கங்களைப் பொறுத்தளவில் அரசியல் என்பதுஅவதூறு பொழிவதும் கிசுகிசுப்பதும் என்று குறுகிவிட்ட நிலையில்...... சம்பந்தப்பட்டவர்கள் இதன் பின்னாவது சுயவிமர்சனம் செய்து திருத்திக் கொள்வார்களென எதிர்பார்க்கிறோம்! என்ற வரிகளை வாசித்த பின்னால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அத்தகைய செயல்களில் (அவதூறு பொழிதல்) இறங்கவில்லை எறறு நினைத்த வேளையில் இப் பத்திரிகையின் 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம், 8ம் பக்கங்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தன்னைத் தானே சாடிக் கொள்கிறதோ என்ற வினாவை எம்முன் எழுப்பி உள்ளது.

நமது நோக்கில் இவர்கள் குறிப்பிடும் தனிநபர் பயங்கரவாதம் இவர்களது புதிய்பாதை முதலாவது இதழில் 'தேசிய் விடுதலைப் போராட்டமா? தேவையற்ற பயங்கரவாதமா?' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையிலுள்ள பயங்கரவாதத்தினைக் குறிக்கிறதா? அப்படியாயின் இவர்கள் நடந்து வந்த பாதை இதிலிருந்து மாறுபட்டிருக்கிறதா? கொள்ளையடித்தல் தவறான செயல் என முதலாவது இதழில் கண்டித்தபின் இது போன்ற செய்ல்களில் இவர்கள் ஈடுபடவில்லையா?

கடந்த காலத்தில் இவர்கள் நடாத்திய வட்டுக்கோட்டை தபால்நிலையப் பணக்கொள்ளை, வட்டக்கச்சி ஜீப் எடுத்துச் செல்கையில வழியில் 'நடாத்திய பணக் கொள்ளை [மாடு வாங்கச் சென்றவர்களிடமிருந்து - 04-10-1981 வீரகேசரி], நவக்கிரியில் வீடொன்றில் நடாத்திய கொள்ளை [இதனால் ஆனைக்கோட்டை, நாச்சிமார் கோவிலடி ஆயுதங்கள் பறிகொடுக்கப்பட்டன - ஈழநாடு 30-01-1982], ஊறணிச் சங்கக் கொள்ளை, பரந்தன் இரயில் நிலையக் கொள்ளை [இதனால் குறிகாட்டுவான் ஆயுதங்கள் பறிகொடுக்கப்பட்டன - 16-03-1982 தினபதி], சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி சம்பளப் பணம் கொள்ளை, கிளிநொச்சி வங்கிக் கொள்ளை என்பன கொள்ளையடித்தலினின்றும் எவ்வகையில் வேறுபட்டது? இயக்கப் பெயரைப் பாவித்துக் கொள்ளையடிக்கும் சமூகவிரோதிகள் எம் சமுதாயத்தில் வளர்வதற்கு இக்கொள்ளைகள் இடமளிக்கும் என்பதால் கொள்ளையடிக்கக் கூடாது எனக் கூறிய இவ்வியக்கமானது இயக்கப் பெயரே இன்றி, இயக்க ஆயுதங்களை உபயோகித்து வீட்டுக் கொள்ளைகளிலும் வழிப்பறிகளிலும் ஈடுபட்ட உண்மைகள் எமது சமுதாயத்துக்கு மறைக்கப்பட்ட வரலாறுகளாகவே இன்றுவரை இருந்து வருகின்றன. இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மறைக்கப்பட்ட வரலாற்றைத் தொடர்ச்சியான அரசியல் அவதானிப்பையும், ஒழுங்கு தவறாது பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கத்தையும் கொண்ட மனிதர்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

www.tamilarangam.net

புதியபாதை 'தமது நோக்கில்', 'தனிநபர் பயங்கரவாதம்' என எதனைக் குறிப்பிடுகின்றார்கள்? இவ் இயக்கத்தால் நடாத்தப்பட்ட வட்டுக்கோட்டை தியாகராசாவின் கொலை, ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதல், நாச்சிமார் கோவிலடி பொலிசார் மீதான தாக்குதல், கான்ஸ்டபிள் மகேஸ்வரநாதன் கொலை, வவுனியாவில் இடம்பெற்ற ஆகாயப் படை வீரர் மீதான தாக்குதல் [இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி பறிகொடுக்கப் பட்டன] என்பனவற்றைக் குறிப்பிடுகிறார்களா அல்லது இவ் இயக்கத்தினால் நடுநிசியில் அழைத்துச் செல்லப்பட்டுக் குரூரமாகக் கொலை செய்யப்பட்ட விடுதலைப் போராளிகளான இறைகுமாரன், உமைகுமாரன் கொலையைக் குறிப்பிடுகிறார்களா? ஒரு விடுதலை இயக்கமானது தன்னகத்தே நேர்மையைக் கடைப்பிடித்தல் அவசியம். சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருக்கக் கூடாது. நாம் செய்வது எல்லாம் மக்கள் யுத்தம் என்றும், மற்றைய இயக்கங்களின் நடவடிக்கைகளைப் பயங்கரவாதமெனவும், சிறுபிள்ளைத்தனமானது எனவும் குறிப்பிடுவது இவ்வியக்கத்தில் அரசியல் நேர்மையின்மையைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இவ்வியக்கத்தில் 'புதியபாதை' சுந்தரத்தின் கொலையைத் தவறானது எனக் கூறும் அதேவேளை இவ்வியக்கத்தில் முக்கிய அங்கத்தவரான சிவனேஸ்வரன் இந்தியாவில் கைதாகி சிறைச்சாலையில் இருந்தபோது பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில், 'எமது இயக்கத்தைவிட்டு வெளியேறுபவர்களுக்கு மரணதண்டனை வழங்குவோம்' [30-06-198[illegible] வீரகேசரி] எனக் கூறியிருப்பது பற்றி யாது கூற விழைகின்றது? இது எதனைக் காட்டுகின்றது? தனக்கு ஒரு சட்டம், மற்றவருக்கு ஒரு சட்டம் என்பதனையா? இவ்வியக்கத்தினர் நாளை ஓர் அரசமைத்தால் தமது நலன்களை மட்டுமே பேண முனைய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

## செயலதிபரின் பேட்டி குறித்து

1974இல் உருவாகிய இயக்கம் 1977இல் இணைந்த உமாமகேஸ்வரன் தலைமையில் 1978இல்பிளவுபட்டதா? அன்றி உமாமகேஸ்வரனுக்கும் ஊர்மிளாவிற்கும் இடையே ஏற்பட்ட இயக்கக் கட்டுப்பாடுகளை மீறிய ஒழுக்கக் குறைவான நடவடிக்கை குறித்த விசாரணைக்கும் பதவி இறக்கப்பட்டமையைப் பொறுக்க முடியாது தவிர்ந்த எந்தவித தகுந்த காரணமும் இன்றி 1979 இல் இயக்கத்திற்கே சொல்லாமல் உமாமகேஸ்வரன் தலைமறைவானதா? உண்மை எது? பத்திரிகையாளருக்குத்தான் தெரியவில்லை. இது விடுதலை இயக்கத்திற்குத் தெரியவில்லை? பொறுப்பான பதவியிலிருந்துகொண்டு ஒழுக்கக் கேடாக நடந்தது மட்டுமல்லாமல் மத்தியகுழு விசாரணைக்கு சமுகம் கொடுக்காமல் பதவி இறக்கியமைக்காக தப்பிஓடிய உமாமகேஸ்வரன் பின் மக்கள் அமைப்பு, கொள்ளையடித்தல் கூடாது என்று பேச்சளவில் கூறிக்கொண்டு சூழ்ச்சி செய்து இயக்கத்தினைக் குலைத்த சுந்தரம், மற்றும் சிலரையும் இணைத்து இயக்கம்(?) நடாத்த ஆரம்பித்தது உண்மை என்பது தெளிவாயுள்ளபோது இன்று எதற்காக கருத்து ரீதியாகவே தாம் பிளவுபட்டதாக வரலாற்றையே திரிக்க முற்படுகிறார்கள்?

இயக்கங்களின் இணைப்புக்குப் பிரபாகரன் அணி வரவில்லை என்றால் எஞ்சி இருந்த இயக்கங்கள் கூட்டாக இயங்கி இருக்கலாம் தானே? ஆனால் அப்படி இல்லாது ஒரு நல்ல கைங்கரியமான மட்டக்களப்புச் சிறை உடைப்பிற்குப் பின், 'நாமே பொறுப்பு. வேறு யாராவது இந்தவிதமாக இனிமேல் உரிமைகோரினால் கடும் நடவடிக்கை எடுப்போமென எச்சரிக்கிறோம்' என ஆறு ஏழு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது மட்டுமல்லாது பிறிதொரு விடுதலை இயக்க உறுப்பினர்களுடன் (மட்டக்களப்புச் சிறையுடைப்பில் பங்குபற்றிய E. P. R. L. F.) கைகலப்பிலும் ஈடுபட்டுள்ளமை கண்கூடு. இவர்களின் ஒற்றுமையின் தன்மையை முற்கூட்டியே உணர்ந்தமையால்தானோ 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கவில்லை. பேச்சளவில் ஒற்றுமையை விட நடைமுறையில் அதைச் சாத்தியப்படுத்தலே அவசியம்.

13 இராணுவ வீரர் மீதான தாக்குதல் வெறுமனே 'ஒரு பழிவாங்கும் நடவடிக்கை' எனக்குறிப்பிடுகிறார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர். ஆனால் 'தமிழீழ விடுதலைப் புலி'களின் துண்டுப் பிரசுரத்திலோ 'பதில் நடவடிக்கை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளக்கத்தை ஒரு விடுதலை இயக்கத்தின் செயலதிபர் என்று கூறிக்கொள்பவராலேயே புரிந்து கொள்ள முடியவில்லை என்னும்போது இவர்களது அரசியல் அறிவின் ஆற்றல் குறித்து எமக்கு மிகுந்த வேதனையும், கலக்கமுமே ஏற்பட்டன. உண்மையில் இத் தாக்குதலானது 'இயக்கத்தின் இரு முன்னணி வீரர்களை இழந்தாலும், போராட்டத்தினை தடைப்படுத்த இயலாது இயக்கத்தின் இலக்கை அடையும்வரை போராட்டம் தடைப்படாது முன்னேறும்' என்ற உறுதியை மக்களுக்கு வழங்கவும், 'இரு போராளிகளை அழித்ததன் மூலம் இயக்கம் அழிந்து விடாது' என்பதை ஸ்ரீ லங்கா அரசின் இராணுவம் பிரிவிற்கும் சகல ஆயுதப் பிரிவிற்கும் எடுத்துக் காட்டும் பதில் நடவடிக்கை ஆகவும்; பயங்கரவாத ஒழிப்பு மகாநாட்டிற்கு எதிரடியாகவுமே செய்யப்பட்டது என அவர்களது பிரசுரவாயிலாக யாவருக்கும் புலனாகிய இவ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விடயம் ஒரு செயலதிபர் எனச் சொல்லிக் கொள்பவரால் புரிய முடியாதது குறித்து மிகக் கவலையாகவே உள்ளது.

இராணுவத்தினர் மீதான தாக்குதல் பக்குவப்படாத நிலையிலான தாக்குதல் (PREMATURE ATTACK) எனவும், திருப்பித் தாக்குமளவிற்கு நாம் வளரவில்லை ஆகவே இப்படி இராணுவத்தினரைத் தாக்கி விட்டு ஓடிமறைவதில் எதுவித பிரயோசனமும் இல்லை எனவும் தமிழீழ விடுதலைக் கழகச் செயலதிபர் கூறுகிறார் அப்படியாயின் கடந்த காலங்களில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் நடாத்திய ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதல், நாச்சிமார் கோவிலடியில் பொலிசார் மீது நிகழ்த்திய தாக்குதல் (இதன் விளைவாக தமிழர்களின் கலாச்சாரப் பொக்கிஷமான யாழ்ப்பாணம் பொது நூலகமே தீக்கிரையாக்கப்பட்டது யாவரும் அறிந்ததே) குருநகரில் இராணுவ வீரர் மீதான தாக்குதல், வவுனியா ஆகாயப்படையினர் மீதான தாக்குதல் எல்லாம் எத்தகையது? பக்குவப்பட்ட பதிலடி கொடுக்கும் நிலையிலான தாக்குதல்களா? அப்படியாயின் நாச்சிமார் கோவிலடித் தாக்குதலின் பின் விளைவாக எமது நூல்களும், நூலகமும் தீயிலே வெந்து சாம்பராகும் முன் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏன் செய்யவில்லை? எத்தனையோ இளைஞரைக் கொலைசெய்தலை ஏன் தடுக்கவில்லை? வவுனியா தாக்குதலின் பின் ஏற்பட்ட அழிவினை தடுத்து நிறுத்தக்கூடிய பதிலடியைக் கொடுத்தார்களா? அன்றி இதனைத் தொடர்ந்து திருமலையில் எரிந்த தீயைத் தன்னும் இவர்களால் அணைக்க முடிந்ததா? ஆகையால் இப்படிப்பட்ட கேள்விகள், கருத்துக்கள் அர்த்தமற்றவையே. ஏனெனில் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் அழிவுகள் தவிர்க்கப்பட முடியாதவை. இவை வரலாறு சொல்லும் உண்மை விளக்கங்கள் இதனை நன்கு புரிந்துகொண்டும் வேறோர் இயக்கம் நடாத்திய தாக்குதல் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும் இவ்வியக்கத்தின் செயலதிபர் 'தவறு' எனக் கண்டிக்க விழைந்துள்ளார். இவர்களெல்லாம் விடுதலையை அங்கீகரிக்கும் உண்மையான விடுதலைப் போராளிகள்தானா?

## இயக்கங்கள் பற்றிய விமர்சனங்கள் குறித்து

இயக்கங்கள் யாவும் கூட்டுச்சேர வேண்டுமென்று பலத்த கோஷமிட்டும், பலவீன விடுதலை இயக்கங்களின் கூட்டை உதாரணம் காட்டியும் நிற்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கு ஒற்றுமை அல்லது இயக்கங்களின் இணைப்புப் பற்றிக் கதைப்பதற்கு அருகதை உள்ளதா என்பது கேள்விக்குறியே. இன்று இந்த 83ல் 'கூட்டுச் சேர்வோம்' எனக் கோஷமிடும் இவ்வியக்கம் இதனைச் சற்று முன்னதாக எண்ணியிருக்கலாம்தானே. இயக்கங்கள் பிளவுபட்டால்தானே கூட்டுத் தேவை. இதில் மிகவும் வேடிக்கைக்குரியது என்னவெனில் தகுந்த காரணம் எதுவுமின்றியே இயக்கத்துக்குரிய கட்டுப்பாட்டுடன் நடக்க இயலாது. ஒழிக்கக்கேடான நடவடிக்கை காரணமாக [illegible] களைக் கருத்தில் கொள்ளாது பிரிந்து சென்றவர்கள் எல்லாம் (சுந்தரம், உமா மகேஸ்வரன் போன்றோர்) இயக்கங்களை (?) அமைத்துவிட்டு 'கூட்டுச் சேர்க' என்று அறைகூவுதலே ஆகும்.

சுந்தரம், தேவன் மீது 'தமிழீழ விடுதலைப் புலிகள்' எடுத்த நடவடிக்கையை ஏனைய இயக்கங்களை அழிக்கும் நடவடிக்கை எனத் திரிபுபடுத்த முனையும் இப் 'புதியபாதை' அதன் காரணங்களைச் சரிவரப் புரியாமையினாலா அல்லது புரிந்து கொண்டாலும் மக்கள் இயக்கமாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' மக்கள் மத்தியில் பெற்றுள்ள ஆதரவை குலைக்கும் நோக்கமாகவோ புரியாதவர்கள் போல் பாசாங்கு செய்கிறார்கள் யார் அறிவார்? சுந்தரத்திற்கான மரணதண்டனையின் நியாயத்தை புலிகளின் 'துரோகத்திற்குப் பரிசு' என்ற பிரசுரம் படித்த அனைவரும் அறிவார்கள். அதே போலவே தேவசேகரம் பிறிதொரு இயக்கத்தின் பெயரை துஷ்பிரயோகம் செய்து கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்டமை யாவராலும் அறியப்பட்ட தவறு. உரிய இயக்கத்தினால் எச்சரிக்கை வழங்கப்பட்டு அதனை மீறுகையில் அவர் தண்டனையை அனுபவிக்க வேண்டியதும் தவிர்க்க முடியாததே. மற்றும் அரச இயந்திரங்களைச் சிர்குலைப்போம் எனக் கூறி தபால் நிலையங்களை அடித்து உடைத்தும், பாடசாலைகளை வலிந்து பகிஷ்கரிக்குமாறும் (ஆசிரியை ஒருவருக்கு துப்பாக்கி காட்டிப் பயமுறுத்தியதையும், பெண்கள் பாடசாலையொன்றில் இறங்கி பெண்களை கையில் பிடித்து இழுத்ததும் தமிழ் மக்கள் யாவரும் அறிந்ததே) கோரிக்கை விடுத்து செயல்படுகையில் மக்களுக்குப் போராளிகள் மீது வெறுப்பு ஏற்படுத்தல் இயற்கையே இத்தகைய செயற்பாடுகளைச் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பகிஷ்கரிப்புப் பற்றிய விமர்சனத்தை முழுமையாகச் செய்ததினூடாக இப் புதிய பாதையின் திரிபு வாதத்தன்மையைத் தெளிவுபடுத்தலாம். முதலில் ஐ. தே. க வேட்பாளர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகத்துடன் ஆரம்பமாகியது. இந்நடவடிக்கை பேரினவாத ஸ்ரீலங்கா அரசிற்கு விசுவாசமாக தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் முயற்சிகளில் இறங்குவோருக்கு எச்சரிக்கையாகவும், இத்தகைய முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கமாகவும் நடாத்தப்பட்டது. இதனை தொடர்ந்து மக்களை தேர்தலை நிராகரிக்குமாறு கோரிய தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசு இராணுவ பலத்துடன் நடாத்த முயன்ற தேர்தலை நிர்மூலமாக்கும் முகமாக அதாவது எமது தமிழ் பிரதேசங்களில் இராணுவ பாதுகாப்புடன் தேர்தலை நடத்த முடியும் என்ற ஸ்ரீலங்கா அரசின் சிந்தனைக்குச் சவாலாக பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களில் வெடிகுண்டுகள் வீசி எச்சரிக்கப்பட்டது. அதனையும் மீறிப் பாதுகாப்பைப் பலப்படுத்த முனைகையில் விடுதலைப்புலிகள் ஒரு வாக்களிப்பு நிலையப் பாதுகாப்பிற்கு நின்ற இராணுவத்தின்மீது தாக்குதல் நிகழ்த்தி தமது எதிர்ப்பு நடவடிக்கையை எடுத்துக்காட்டினர். இதனைப் புரிந்து கொள்ளாத தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர் என்றும், தேர்தல் நிராகரிப்புத் தவறு

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

னது என்றும் புலம்புவது ஆழ்ந்த விசனத்திற்கும், விமர்சனத்திற்கும் உரியதே.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கூறி வட்டுக்கோட்டை தியாகராஜாவை கொலைசெய்தும் பின் நாச்சிமார் கோவிலடியில் பொலிசார் மீது தாக்குதல் தொடுத்து பகிஷ்கரிக்க முயன்றதும் அத்தாக்குதல் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்த கதையாக பகிஷ்கரிப்பில் தீவிரமாக நின்ற மக்களையே கூட்டணிக்கு வாக்களிக்கச் செய்து சகல ஆசனங்களையும் கூட்டணியே கைப்பற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி கூட்டணிக்கு முண்டு கொடுத்த மாதிரி நடந்துகொண்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இன்று உள்ளூராட்சி சபை தேர்தல் பகிஸ்கரிப்பை விமர்சிக்க விழைந்தது இவர்களின் அரசியல் குறித்த திடமான திட்டமற்ற தன்மையை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

அண்ணாமலையைப் பொறுத்தனவில் தன்னை விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவு என இனம்காட்டி இளைஞர்களது போராட்டம் குறித்து 'சரியான பாதை' என 'கோடிகாட்டிவிட்டு' தேர்தல் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளுமாறு கோரும்போது நீங்கள் இராணுவத்துக்கு ஒப்பானவர்கள் என்றும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும் பேசிய இவரது அரசியல் வெளிவேஷத்தினை நன்கு காட்டுகிறது. பேசுவது ஒரு சித்தாந்தம். செயற்படுத்துவதோ வேறொன்றாக இருக்கும். இவர் போன்ற போலிகள் எச்சரிக்கைக்கு உரியவர்கள் மட்டுமல்ல, தண்டனைக்கும் உட்படுத்தப்பட வேண்டியவர்களே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டம் குழப்பப்பட்டமை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருக்கு இடப்பட்ட எச்சரிக்கை. 'தீயசக்திகள்' என்ற பதத்தினை உபயோகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரைத் தோலுரித்துக் காட்டும் ஒருமுயற்சியே. இந்நிகழ்ச்சியே யார் தீய சக்திகள் எஸ்பதை மக்கள் தீர்மானிக்க வைத்து கூட்டணிக்குப் பகிஷ்கரிப்பின் மூலம் மரணஅடி கொடுத்து தேர்தல் மாயையிலிருந்து மக்களை விடுபட வைத்ததாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மீது இராணுவ நடவடிக்கை எடுக்குமளவிற்கு அப்போதைய சூழ்நிலை வளர்ந்திருக்கவில்லை. இதேவினவை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திடம் வினவினல்...... ஏன் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின்போது எந்தவொரு கூட்டணி உறுப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதைக்கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தொடர்பு உண்டுானி (இவர்கள் கூற்றுப்ப்டி) நாம் நினைக்கலாமா? மற்றும் நம்மைதாமே நிர்வகிக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனப் பு(ரியாத)திய பாதை எதனைக் குறிப்பிடுகின்றது? வவுனியாவில் புத்தர் சிலை விவகாரத்தைத் தடுத்து நிறுத்த முடியாதுபோன நகரசபையினரையா? அல்லது திருமலையில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்தை அப்புறப்படுத்த இயலாதுபோன நகரசபையினரையா? எங்கே எமது இறைமைகளும், சுதந்திரமும் பாதுகாக்கப்படுகிறது? இந்த நகரசபைகளுக்குத் தமது பிரதேசங்களை நிர்வகிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லையா?

சமூகவிரோதிகள் அரசபடைகள் செயலிழந்து போகையில் இலகுவாக வளர்ச்சியுறுவர். இந்நிலையில் இவர்களிடமிருந்து சமுதாயத்தினைக் காப்பாற்றும் பொறுப்பு இயக்கத்திடம் வருகிறது. அவ்வகையில் சிறைச்சாலை வசதியற்ற சூழ்நிலையில் இவர்களுக்கு 'சமூகவிரோதிகளை ஒழிப்போம்' என்ற பிரசுரம் மூலம் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இதனையும் மீறிச் செயற்படுகையில் அதிகளவில் தவறிழைக்கும் சமூகவிரோதிகள் இனம்காணப்பட்டு அழிக்கப்படுகிறார்கள். இது எப்படித் தவறாகலாம்? இதனைத் தானே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சுந்தரம் புலி(?)ப்படைந் பிரிவும் மேற்கொண்டுள்ளனர். சிவனடியான் மகாலிங்கம் கொலைசெய்யப்பட்டமை இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்று என்று இவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம் 29-04-1983 ஈழநாடு)

இடதுசாரி வாய்ச்சவாடல் எனக்கூறிக்கொண்டு பிறிதொரு இயக்கம் செய்யும் சிவப்புப் பிரசாரங்களைக் கண்டிக்கும் இவ்வியக்கம் 'மக்கள் யுத்தம்' என்பதை வாய்ப்பாடாக்கி அனுதாபம் தேட முனைதல்என்பதும்கூடஎந்தசாரிவாய்ச்சவடாலில்அடங்கும்? மாற்றுத் திட்டத்தை முன்வைக்காமல் செயற்படுத்தப்பட்ட சத்தியப்பிரமாண எதிர்ப்புக் கோஷம் என்று வேறோர் இயக்கத்தைக் கண்டிக்க முனையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் கிளிநொச்சிப் பகுதிகளில் 'சத்தியப் பிரமாணத்தை நிராகரிப்போம்' என்றும் யாழ்நகர் எங்கும் 'ஐக்கிய இலங்கையை ஆதரிப்பவர்கள் தமிழீழ விடுதலைக்கு எதிரானவர்கள் அரசு இயந்திரத்தைப் பலப்படுத்தும் பச்சோந்திகள். இவர்களுக்குரிய தண்டனைக்கு இவர்களே பொறுப்பு' என்று சுவரொட்டிகள் ஒட்டியதை மறந்துவிட்டார்களா?. மற்றும் பரீட்சைகளிற் தலையிடுதல் பொழுதுபோக்குப் பேர்வழிகளின் விளையாட்டு எனக் கூறுவது முற்றிலும் சரி. ஆனல் அப்படிக் கூறுவதானல் இந்த இயக்கம் தன்னையே அப்படியானவர்கள் நிரம்பிய இயக்கமாகக் காட்டுவதுபோல் இருக்கின்றது. ஏனெனில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதிக வினாத்தாள்களைக் குழப்பிவிட்டு (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கோப்பாய் மகாவித்தியாலயம்) வேறொரு இயக்கத்தின் பெயரால் பிரசுரம் வெயிட்டவர்கள் இவர்களே.

தமது நிலைப்பாடுகளிலும் செயற்பாடுகளிலும் குழப்பமுள்ள இத்தகையவர்கள்
முன்பின் கருத்து முரண்பாடானவர்கள் நிரம்பிய இந்த இயக்கமா நாளைய விடுதலையை உத்தரவாதம் செய்யக்கூடியது? புதிய பாதையே அவதூற்றுக் சேற்றால் நிரம்பியுள்ளது. நாளைய புதிய பாதையில் களைகளே முளைகொண்டு வளரும் என்பது எமது ஊகம். நாளைய விடிவை நோக்கி நகரும் ஒவ்வொரு பாதமும் தெளிவான, உறுதியான பாதையைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்புதான் அந்தவிடுதலைப் பாதையில் உறுதியாக முன்னேறுதல் அவசியமாகும்.

— அரசியல் அவதானிகள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்